'B'

# ஒரு லூத்தரன் என்றால் என்ன?
# WHAT IS A LUTHERAN

இயற்கையாகவே ஒரு லூத்தரன் என்றால் மார்ட்டின் லூத்தரை பின்பற்றுபவர்கள். தவறு.

நாங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பின்பற்றுபவர்கள்.

மார்ட்டின் லூத்தர் அதைப்போலவே நீயும் நானும் சுவிசேஷமென்னும் பொக்கிஷத்தை உலகத்திற்கு எடுத்துச் செல்லும் பூமியின் பாத்திரங்கள். நாம் பொதுவான பாவமுள்ள களிமண்கள். ஈடு இணையற்ற மகிமையின் பொக்கிஷமாகிய மீட்பு இயேசு கிறிஸ்துவக்குள் உள்ளது.

மார்ட்டின் லூத்தர் எப்படி விசுவாசித்தாரே அதைப் போலவே நாங்களும் விசுவாசிக்கிறோம். அதாவது நாங்கள் இரட்சிக்கப்பட்டோம்.

1. கிருபையினால் மட்டும்.
2. விசுவாசத்தினால் மட்டும்.
3. கிறிஸ்துவினால் மட்டும்.
4. வார்த்தையினால் மட்டும்.

மற்ற சபைகளுடன் நம்மை விததியாசப்படுத்திக்கொள்வதற்காக நாம் சும்மா லூத்தரன் பெயரை பயன்படுத்துகிறோம்.

நாம் மேலும் நம்மை மற்றவர்களிடத்திலிருந்து வித்தியாசப்படுத்திக் கொள்வதற்காக நாங்கள் லூத்தர் என்ற பெயரை ஏற்றிருக்கிறோம் அல்லது தாங்கியிருக்கிறோம்.

நாம் நம்மை தி சர்ச் ஆப் தி லூத்தரன் கன்பெஸ் என்று அழைக்கிறோம்.

<u>**நாங்கள் கிருபையினால் மட்டும் இரட்சிக்கப்பட்டோம்.**</u>

எபேசி 2:8–9 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.

தகுதியில்லாதவனிடத்தில் பட்ஷபாதம் (ஆதரவு காட்டுவது) கிருபையாயிருக்கிறது. (அல்லது) தகுதியில்லாதவனுக்கு காட்டும் அன்பு கிருபையாயிருக்கிறது. இது கிறிஸ்து இயேசு நமக்காகக் கொடுத்த இரட்சிப்பு.

அவர் நமக்காப் பெரிய செய்கை செய்தார்.

பரலோக இராஜ்ஜியத்தை அடைவதற்கு நாம் ஒன்றுமே செய்யவில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் இது நமக்கு ஒரு இலவச பரிசாயிருக்கிறது.

என்றுமே நம்மால் முடியாத பரிபூரண பரிசுத்த ஜீவியத்தை அவர் தாமாகவே விரும்பி இந்த பூமிக்கு வந்து ஜீவித்தார். அவர் எப்போது இதைச் செய்தாரோ அவர் பிதாவாகிய தேவனுடைய நியாயப்பிரமாணத்தை பரிபூர்ணமாய் முழுமையாய் நிறைவேற்றினார். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். வெளிப்படையாக நாம் குற்றமுடையவர்கள், அசுத்தமுள்ளவர்கள் ஆகவே நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமிக்கு வந்து பரிசுத்தமுள்ளவராய், பரிபூர்ணமுள்ளவராய், நமக்கு பதிலாக ஜீவித்தார், நம்முடைய பிதாவாகிய தேவன் கூட பாவத்திற்கு தண்டனை கேட்கிறார். ஒரு வேளை நீ நியாயப் பிமாணத்தை மீறி ஒரு நுனி அல்லது ஒரு துளி குற்றம் செய்தாலும் நீ எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பாய் (ஒரே ஒரு கட்டளையை மீறினாலும் எல்லாக் கட்டளைகளையும் மீறியதற்கு சமமான குற்றவாளியாய் தீர்க்கப்படுவாய்.

பாவம் செய்கிற ஆத்துமா நிச்சயமாகவே சாகவே சாகும்.

இல்லை, ஒன்றுமேயில்லை அவர் பரிசுத்தமுள்ளவராய் ஜீவித்து நம்மிடத்தில் நமக்காக நம் தண்டனையை அவர்தம் மேல் வருவித்துக் கொண்டு அவர் நமக்காக மரித்தார்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். இஸ் 53:5 யார் அதற்கு தகுதியில்லாதவர்களாயிருந்தார்களோ அவர்களுக்காக அவர் இதைச் செய்தார். என்ன அன்பு அவர் இழந்த பாவிகளான நமக்காக காட்டும் அன்பு.

அவர் சிலுவையின் மேல் மரிக்கும் போது சொன்னார் முடிந்தது.

இழந்து போன உலகத்திற்காக அவர் செய்த இரட்சிப்பின் வேலை முடிந்தது.

கடவுள் பரிபூர்ண பரிசுத்தத்தை கேட்கிறார். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிபூர்ண பரிசுத்தமுள்ள தேவ ஆட்டுக்குட்டி, தேவன் பாவத்திற்கு தண்டணையை கேட்டார். ஆகவே நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேரான மகனாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அந்த தண்டணையை சுமக்கும்படி இந்த பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்த இரட்சிப்பு கிறிஸ்து இயேசுவினால் வெற்றிக் கொள்ளப்பட்ட இது தேவனுடைய இலவச பரிசாயிருக்கிறது.

என்ன? எப்பொழுதாவது ஒரு சிலர் பத்தாயிரம்டாலர் பணத்துடன் உங்கள் வீட்டின் கதவண்டையில் வந்தால்? அவர் வருவார் என்று உங்களுக்கு முன்பே தெரியாது. நீங்கள் ஒரு சோம்பேரி, அந்த நேரத்தில் எந்த வேலையும் செய்யவில்லை. பணம் நேரிடையாக உங்களுக்கு வருகிறது. நீங்கள் அதற்காக எதுவும் செய்யவில்லை. நீங்கள் நிச்சயமாக அதற்கு தகுதியானவரில்லை. ஆனால் இயேசுகிறிஸ்துவில் அவ்விதமான இரட்சிப்பு இருக்கிறது. இது ஒரு இலவச பரிசாயிருக்கிறது. இது நம்முடைய கிருபையுள்ள அன்பான தேவனுடைய கைகளிலிருந்து வந்தது. ஆகிலும் நீங்கள் உங்கள் ஜீவியம் முழுவதும் இதற்காக உழைத்தாலும் அந்த தகுதியை உங்களால் எப்போதும் பெறமுடியாது.

வருந்த தக்கது, இன்றைய நாட்களில் இங்கு மங்கும் யார் அவர்கள் நாம் தகுதியுடையவர்கள் என்று, நாம் அதற்காக உழைக்கமுடியும், அதை பெற முடியும், அல்லது குறைந்தபட்சம் அதன் ஒரு பகுதியையாவது பெற முடியும் என்று போதிக்கிறார்கள். காரணம் என்னவென்றால் நீங்கள் நற்கருணையாலும் நற்செய்கையாலும் இரட்சிக்கப்பட்டீர்கள் என்று போப்பினுடைய ஆதிக்க அடிமைத்தனத்தில் லூத்தரன் சீர்த்திருத்தவாதிகளும், திருச்சபைகளும் இருந்தபோது போதிக்கப்பட்டோம். வேதாகமம் நமக்கு போதிக்கிறது நாமனைவரும் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோமென்று, ஆகிலும் தேவனுடைய கிருபையின் மூலமே பிறகு நம்முடைய நற்கிரியைகளினால் அல்ல அதற்காகவே கிருபையினால் மட்டும் இரட்சிப்பு என்ற உண்மையான உபதேசத்திற்கு அவருடைய ஜனங்களை சீர்த்திருத்த வாதத்தை பயன்படுத்தி திருப்பினார்கள். இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

ரோம 3:24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

மேரியும் மற்ற விசுவாசிகளும் அவர்களுடைய ஜீவியத்தில் போதுமான அளவு தகுதியை அவர்களுக்குள் சேகரித்து வைத்திருக்கிறபடியால் அவர்கள் வாழ்வில் பாவம் செய்தாலும் அதுநீங்கிப் போகும் என்று ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினர் போதித்தார்கள் பிறகு இப்போதும் அவ்வாரே போதித்து வருகின்றார்கள். அதிகமான, போதுமான அளவு தகுதியை அவர்கள் அங்களுக்குள் குவித்து வைத்திருப்பதாகவும் அப்படியே ஒரு நிஜமான காரணத்தை அவர்கள் சொல்கிறார்கள்.

அவர்களில் ஒரு சிலருடைய தகுதியை நீங்களும் பெற்றுக் கொள்ள மனுப்போடலாம்?

என்ன கேவலமான அர்த்தமற்ற சொற்கள் இவைகள் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள, பதிவு செய்யப்பட்டுள்ள மனிதவர்க்கம் முழுவதும் பாவிகளாயிருக்கிறோம். ஆகவே பாவிகளாயிருக்கிற நம் அனைவருக்கும் இரட்சிப்பின் தேவையுள்ளது என்று கடவுள் மூலம் ஒரு பகுதியான இரட்சிப்பும் மனிதனுடைய கிரியைகளினால் மறு பகுதியான இரட்சிப்பும் தேவையில்லை.

ரோமர் 3:22–23. அது இயேசு கிறிஸ்துவைபற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே, விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை.

எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி கிருபையினால் மட்டும் இரட்சிப்பு என்ற உபதேசத்திலிருந்து ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினர் மாறுபடுகின்றனர். ரோமன் கத்தோலிக்கச் திருச்சபையிலிருந்து நாம் இப்பவும் பிரிந்திருக்கிறோம். நாம் நம்மை லூத்தரன் என்று அழைக்கிறோம். ஏனென்றால் லூத்தர் வார்த்தையின்படி செய்ததை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

<u>விசுவாசத்தினால் மட்டும் நாங்கள் இரட்சிக்கப்பட்டோம்.</u>

ஆதலால் மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதி மானாக்கப்படுகிறான் என்று தீர்க்கின்றோம். ரோமர் 3:28

விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டோம் இது மார்ட்டின் லூத்தர் குறிப்பாக ரோமர் கலாத்தியர் நிரூப பகுதிகளை ஊடுருவிப் படித்து பரிசுத்த ஆவியின் சக்தியினால் உண்மையை தெரிந்து கொண்டார் அவருடைய ஒரே பேறான மகனாகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவக்கடனை தீர்த்து தகுதியை உண்டாக்கினபடியால் நாம் எல்லோரும் இப்பொழுது பிதாவின் கண்களுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டோம்.

நம்முடைய பாவத்திலிருந்தும், அநீதியிலிருந்தும் நாம் மேலெழும்படி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நீதி நம்மை மூடிக்கொண்டது.

எப்பொழுது நம்முடைய பிதா, நாம் இரட்சகராகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் நம்மை பார்க்கிறார். அவர் நம்மை அவருடைய சொந்தபிள்ளைகளாக பார்க்கிறார்.

நாம் நம்முடைய விசுவாசத்தின் மூலம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் நீதிமான்களாக்கப்பட்டோம்.

அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே, விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும், எவர்கள் மேலும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை. ரோமர் 3:22.

ரோமர் 3:24–25

விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பு என்னும் பரிசை நாம் பெற்றுக்கொள்கிறோம். நாம் அதற்காக எதையும் செய்யவில்லை, அதற்குண்டான தகுதியும் பெற்றுக்கொள்ளும் கை அது இரட்சிப்பு என்னும் பரிசையும் பெற்றுக்கொள்கிறது.

இந்த பூமியானது மழையைப் பெற்றுக் கொள்வதைப் போல இது ஒரு இனமாக பெற்றுக் கொள்ள கூடியது. விசுவாசமானது சிறிது மாத்திரம், குறிப்பிட்ட அளவு மாத்திரம், மனிதன் (உள்ளுதலுக்குண்டாக்கப்படுகிறான்) ஊக்கப்படுத்தப்படுகிறான், விசுவாசமானது தேவன் மனிதன் மேல் உண்டாக்கும் செய்கையாய் அது இருக்கவில்லை என்று கள்ள உபதேசம் திருச்சபைகளில் ஊடுருவி பரவியுள்ளது.

நான் என்னுடைய சுயஞானத்தினாலோ அல்லது சுயபெலத்தினாலோ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவில்லையென்று நம்புகிறேன். என் கர்த்தர் என்னிடத்தில் அவராக வந்துசேரவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தின் மூலம் என்னை அழைத்தார். அவருடைய வரத்தின் மூலம் தெளிவை (ஞானத்தை) உண்டாக்கினார். என்னை புனிதப்படுத்தி உண்மையான விசுவாசத்தில் வைத்தார். இதைப் போன்ற வழிமுறையில் ஆண்டவர் அழைத்தார், ஒன்று சேர்த்தார், இந்த பூமியில் உள்ள அனைத்து கிறிஸ்துவ திருச்சபைகளையும் தெளிவை ஞானத்தை உண்டாக்கிட புனிதப்படுத்தினார். அதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரே உண்மையான விசுவாசத்தில் கலந்து கொண்டார். என்று மார்ட்டின் லூத்தரின் சிறிய கத்தோகிஷ்மு புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

ஒரு வேளை எந்தவொரு காரணத்திற்காகவோ, அல்லது பெலத்தினாலோ என்னுடைய சுயமாக நான் விசுவாசிக்கிறேன். பிறகு முழுவதும் கிருபையினால் மட்டுமல்ல பரிசுத்த ஆவியின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டு விசுவாசமானது சாதரண்மாக வாங்கிக் கொள்ளுகின்ற கைளாயிருக்கிறது.

விசுவாசத்தின் நம்பிக்கையை மனிதனுக்கு கொடுப்பதற்கு அப்படியே லூத்தராணியர்களாகிய நாங்கள் அநேக பல வகையான திருச்சபைகளிலிருந்து எங்களை பிரித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை குறித்த அவர்களுடைய ஒரு சில பேச்சுகளை தீர்மானங்களை அவர்களோடு கலந்து வேலை செய்வதிலிருந்து பிரிந்து இருக்கிறோம். நிஜமென்னவென்றால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவர்களுடைய சீஷர்களுக்கு சொன்னார் நீங்கள் என்னை தெரிந்தெடுக்வில்லை நான் உங்களை தெரிந்துக் கொண்டேன்.

ஏன் ஒருசிலர் விசுவாசிக்கின்றார்கள் என்றால் விசுவாசிப்பதற்கு விருப்பமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதே அந்த காரணம் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் குறைந்த அளவு பரிசுத்த ஆவியை தடை செய்கிறார்கள்.

இது ஒரு வேளை பாவமுள்ள மனிதன் மாறுவதற்கென்று கொடுக்கப்படுகின்ற ஒரு நம்பிக்கை அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிப்பதற்கு விருப்பம் உள்ளவனாய் இருந்தானா? அல்லது மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் குறைந்த அளவு பரிசுத்த ஆவியானவரை தடைச் செய்தானா? ஒரு வேளை இல்லவேயில்லை.

வழியில் கடுமையாக எதிர்க்ககூடிய ஒரு மனிதனை நம்மால் பார்க்க முடியாது. அவன் பயமுறுத்துவதிலும், கொலைகள் செய்வதிலும் சுவாசிக்கிறவனாயிருந்தான். அப் 8:3 துன்பபடுத்துகிற சவுல் அப்போஸ்தலனாக, ஊழியக்காரனாக மாறினான் இது ஆண்டவருடைய வல்லமையின் மூலம் மாற்றப்பட்டான்.

கடவுள் ஒருவருடைய மாற்றுதலில் அந்த மனிதனும் ஒத்துழைப்பு கொடுக்கிறான் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். தெய்வீகத்தன்மையில்லாத மனிதன் முழுவதும் தெய்வீகத் தன்மையை (ஆன்மீகத்தை) குறித்து அறியாதவனாயிருக்கிறான். இரட்சிக்கப்படாத மனிதன் பாவத்தில் மரிக்கிறான்.

அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் எபேசி 2:1

1கொரி 2:14

பரிசுத்த ஆவியில்லாமல் இயேசுகிறிஸ்துவை ஒருவனாலும் கடவுள் என்று சொல்ல முடியாது. ஆனால் பரிசுத்த ஆவியின் மூலம் அப்படிச் சொல்லமுடியும்.

இது அவர் வார்த்தையின் சாதனாமாயிருந்து பரிசுத்த ஆவியின் கத்தியாயிருக்கிறது. இந்த பரிசுத்த ஆவியானவர் அழைக்கிறவராய், ஒன்றுச் சேர்க்கிறவராய் ஞானம் (தெளிவை) உண்டாக்குகிறவராய், புனிதப்படுத்துகிற வராயிருக்கிறார்.

பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் உள்ளுதலினால் எழுதப்பட்டது என்று லூத்தராயியர்களாகிய நாங்கள் விசுவாசிக்கிறோம் நிச்சயமான அப்படியே சரியான இரட்சிப்பை தனக்குள் கொண்டிருக்கின்ற விசுவாசமானது கடவுளுடைய மிகப்பெரிய இலவச பரிசு ஆகும். நாம் நம்முடைய நற்கிரியைகளினால் இரட்சிப்பை அடையவில்லை, நாம் எல்லோரும் விசுவாசத்தின் மூலம்தெய்வீகத் தன்மை – செய்யப்பட்ட விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டோம்.

<u>நாம் கிறிஸ்துவினால் மட்டும் இரட்சிக்கப்பட்டோம்.</u>

அப் 4:12 அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை என்றான்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே உலகத்தின் மீட்பராய் இரட்சகராய் இருக்கிறார் என்று எல்லா வேதங்களும் நிரூபித்து இருக்கின்றன. ஆதி 3:15லிருந்து மல்கியா 4:2 வரை பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசனங்களை அவர் நிறைவேற்றினார். அவரே அல்பாவும், ஒமேகாகவுமாயிருக்கிறார்.

அவர்யார் அவர், நம்முடைய இம்மானுவேலர், நம்மோடிருக்கிற கடவுள்.

இருந்த போதிலும் வேதம் மிகவும் தெளிவாயிருக்கிறது. மிகப்பெரிய கிருஸ்துவ திருச்சபையாக ரோமன் கத்தோலிக்க சபை இருந்தாலும், மத்தியஸ்தராய் தன் மகனிடத்தில் பரிந்து பேசுகிறவராய் மேரி இருக்கின்றார் என்று அவர்கள் சொல்கின்றனர். இரட்சகர் இரட்சகராயிருக்கிறார்.

தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே 1தீமோ 2:5

நம்முடைய பாவமான செயல்கள் எல்லாவற்றையும் கடவுள் அவர்மேல் சுமத்தினார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய வெற்றி சிறந்ததினால் நாம் இரட்சிக்கப்பட்டோம். எந்த ஒரு பாவமான மனிதனிடத்திலிருந்தும் மேரி வேறுபட்டவரல்ல, தவிர்த்து நீங்கலாக பரிசுத்த இரக்கத்தினால் கடவுள் தேவ மகனை சுமக்கும்படி மேரியை தெரிந்து கொண்டார். நம்முடைய தேவனுடைய இரக்கத்தின் மூலம் அவருடைய மகனுடைய தகுதியாக்குதலின் மூலம் மாத்திரமே அவர் தேவனடைய சிங்காசனத்தை பெற்றுக் கொள்ளமுடியும். அவர் ஒருவர்தான் இரட்சகர் இதைப்போன்ற இதேதான் நம்முடன் இருக்கிறது. இந்த உலகத்தின் பாவங்களை நீக்கி போடக்கூடிய தகுதி நம்முடைய வெளிச்சத்தின் தேவனாகிய அவருக்கு மட்டுமே இருக்கிறது. கிறிஸ்துவினாலே மட்டுமே இரட்சிப்பு என்று உண்மையான லூத்தரன் திருச்சபைகள் லூத்தரன் காலத்திலும் இன்றும் போதித்து வருகின்றன.

யாரால் அவர் ஒருவரே ஒருவரின் மூலம் மட்டுமே நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறோம்.

இந்த கடைசி நாட்களில் அநேக மத அனுசரனைகளின் முறையில் தங்களை கிறிஸ்துவாக பாவனை செய்து கொண்டு களள்ளக்கிறிஸ்துகளாய் உள்ளனர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒலிவமலையில் உட்கார்ந்து அவர்களுக்கு சம்பவிக்கப்போகிற காரியங்களை குறித்து எச்சரித்து சொன்னது என்னவென்றால்.

மத் 24:22–25 அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிபோவதில்லை, தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும். அப்பொழுது இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார் அதோ அங்கே இருக்கிறார் என்று அவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.

ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ள தீர்க்க தரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள்.

இதோ முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

யோவான் அவர்களை அந்திக்கிறிஸ்துவர்கள் என்று அழைக்கிறார். ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவினிடத்தில் கிறிஸ்துவுக்கு பதிலாக தங்களை நிறுத்திக் கொள்ளப்பார்க்கிறார்கள்.

1யோவா 2:18–25 பிள்ளைகளை இது கடைசிகாலமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டப்படி இப்பொழுதும் அநேக அந்நிக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள். அதினாலே இது கடைசிக் காலமென்று அறிகிறோம்.

அவர்கள் நம்மை விட்டுப்பிரிந்து போனார்கள் ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை. நம்முடைய வர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்.

நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.

குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடைவனல்ல குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறான்.

ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்க கடவது ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால் நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். நித்திய ஜீவன் அளிப்பேன் என்பதை அவர் நமக்குச் செய்த வாக்கு தத்தம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் அல்லாமல் வேறு எந்த ஒரு நாமத்தினாலும் இரட்சிக்கப்படவில்லை அந்த நாமத்தை தவிர வேறு எந்த ஒரு நாமமும் மனிதனை இரட்சிக்க கொடுக்கப்படவில்லை என்று லூத்தாராணியர்களாகிய நாங்கள் விசுவாசித்து போதித்து அறிக்கையிடுகிறோம். கல்வாரிச் சிலுவையில் அவர் சிந்தின திரு இரத்தத்தின் மூலம் மட்டுமே, அவர் மாத்திரமே தேவனோடு எங்களுக்கு சமாதானத்தை உண்டாக்கினார்.

கொலெ 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்கு பிரியமாயிற்று.

2 கொரி 5:18–21 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது, அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மை தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

அதென்னவெனில் தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

ஆனபடியினாலே தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானதிபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாக்குங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்?

கொலே 1ம் அதிகாரம் அபிரே 1ஆம் அதிகாரம் யோவா 1ம் அதிகாரம் படிக்கவும். அவருடைய இரட்சிப்பின் பணியில் வேறு ஒருவருக்கும் பங்கு இல்லை என்பதை நாம் மேற்சொன்ன வேதக்குறிப்பிலிருந்து பார்க்கலாம். மனிதனை இரட்சிக்கும் கடவுளுடைய வேலையை அது எடுத்துக் கொண்டது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உண்மையான கடவுள் அவர் மனிதனுடைய இரட்சிப்பை முழுமையாய் பரிபூர்ணமாய் நிறைவேற்றினார்.

நான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறேன், உண்மையான தேவனென்று பரலோகத்திலிருந்து வந்த பிதாவினுடைய ஒரே பேரான மகன் என்றும், தவிரவும் உண்மையான மனிதனென்றும், கன்னிமரியாளிடத்தில் பிறந்தார் என்றும் மரணதண்டனைக்குட்பட்ட அந்த கடைசி சந்ததியிலும் யார் என்னை மீட்டெடுத்து பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், மரணத்திலிருந்தும், பிசாசின் வல்லமையிலிருந்தும், யார் என்னை பொன்னினாலும் அல்ல, வெள்ளியினாலும் அல்ல, ஆனால் அவருடைய மாசில்லாத பரிசுத்த விலையேறப்பட்ட திரு இரத்தத்தினாலும், குற்றமில்லாத பாடுகளினாலும், மரணத்தினாலும் யார் என்னை விடுவித்தாரோ அவருடைய சொந்தமாய் நானிருக்கிறேன். அந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை கடவுள் என்று விசுவாசிக்கிறேன் என்று நாம் நம்முடைய சிறிய கத்தோகிஷ்மு புத்தகத்திலிருந்து கற்றுக் கொடுக்கிறோம்.

## <u>வார்த்தையினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்பட்டோம்</u>

எபி 4:12

மனிதன் உண்டாக்கின பரம்பரை பழக்கங்களை விசுவாசிப்பதின் மூலம் நாம் இரட்சிக்கப்படவில்லை. ஏனென்றால் நாம் ஆலோசனை சங்கத்தாரும், போப்பும் சொல்லுகிறபடி நாம் போக வேண்டிய பரலோக இராஜ்ஜியத்திற்கு போகமுடியாது. பாவத்திலிருந்து பாவமன்னிப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியாது ஏனென்றால் ஒரு குறிப்பிட்ட குழுக்களை சார்ந்த மனிதர்கள் அதற்கு சார்பாக எங்களுடன் ஒன்று

கூடுகிறார்கள். எது இரட்சிப்பினுடைய ஞானத்தை எங்களுக்கு உண்டாக்கியதோ அந்த வார்த்தையை நாங்கள் விசுவாசிப்பதினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டோம். பழைய பாட்டொன்று இவ்விதமாய்ச் சொல்லும். பலனில்லாத மனிதன் மேல் இருப்பது பலனில்லாத மரத்தைப் போலிருக்கும் என்று மனிதனால் அல்ல கடவுளுடைய வார்த்தையினால் மாத்திரமே, நாம் தேவனுடைய வார்த்தைகளை பேசினதால் மாத்திரமே கடவுள் நம்மை இரட்சித்தார்.

வேதாகப் புத்தகம் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. முஸ்லிம்களின் குரான்புத்தகம் தேவனுடைய வார்த்தையல்ல, அல்லது வேறு எதுவானாலும் அல்லது எந்த ஒரு முற்போக்கான எந்த ஒரு மதத்தின் எழுதப்பட்ட பரிசுத்த வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள் அல்ல. 2தீமோ 3:17.

மேற்சொன்ன வேதப்பகுதியில் அநேகரிலிருந்து நாம் பார்க்கலாம். கிறிஸ்துவ வேதப்புத்தகம் நிஜமான தேவனுடைய வார்த்தை அது இரட்சிப்புக்கு நம்மை கிட்டிச் சேர்க்கிறது. உண்மையில்லா மற்ற மாறுபட்ட மதத்தினருடைய பரிசுத்த புத்தகங்களை நீங்கள் படித்து இருந்தால் அவர்கள் நற்கிரியைகளின் மூலம் மட்டுமே இரட்சிப்பு பெற முடியும் அதேப் போன்ற வழியில்தான் இரட்சிப்பு பெற முடியும் என்று சொல்லப்பட்டுள்ளது.

கிறிஸ்துவினால் மட்டுமே விசுவாசத்தினால் மட்டுமே, கிருபையினால் மட்டுமே, கடவுளுடைய வார்த்தையினால் மட்டுமே, அந்த முறையான வழியில் மட்டுமே இரட்சிப்பு பெறமுடியும்.

2பேது 1:19 அந்த உறுதியான தீர்க்க தரிசன வசனமும் நமக்கு உண்டு பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும், இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நலமாயிருக்கும்.

வேதாகமப் புத்தகம் கடவுளுடைய வார்த்தையாயிருக்கிறது. ஏனென்றால் அதிலிருந்து மீட்பராகிய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அது நமக்கு வெளிப்படுத்துகிறது. வேதாகப் புத்தகம் உண்மையான அவருடைய சரித்திரமாயிருக்கிறது. முதன் முதலாக மிகமுக்கிய சுவிஷேசமான வாக்குதத்த மானது ஆதி 3:15லிருந்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டார் அவர்ஸ்திரியின் வித்தாயிருந்து சாத்தானுடைய இயேசு கிறிஸ்துவின் குதிக்காலை

நசுக்கி பாவமுள்ள மனிதனுடைய கைகளில் கோரச்சிலுவையில் பாடுகளை அனுபவித்தார், ஆனாலும் அவர் மரித்து அடக்கம் செய்யப்பட்டு பின்னால் மறுபடியும் மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தர்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுகிறார். அதைக் காட்டிலும் அதிகமாய் வேதபுத்தகமும் அவருடைய சரித்திரமாயிருக்கிறது

யோவா 1:1,14.

எப்போது நாம் தேவனுடைய வார்த்தையை படிக்கின்றோமோ அப்போது வார்த்தை மாம்சமாகிய தேவனாய் மாறிய அந்த மகிமை நாம் காணமுடியும். கடவுள் நம்மை அவருடைய வேதாகமபுத்தகத்தை படிக்கும்படி உற்சாகப் படுத்துகிறார் எனென்றால் என்னைக் குறித்துச் சாட்சியிடுகிறவைளும் அவைகளே வேதவாக்கியங்களே என்று உரைக்கிறது (யோவா 5:33)

பாவ—இருள் நிறைந்த அப்படிப்பட்ட உலகத்தில் நாம் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் கடவுளுடைய வார்த்தை நாம் தினந்தோறும் படிப்பதின் மூலம், கற்றுக்கொள்வதின் மூலம் நாம் உலகத்தின் உண்மையானவெளிச்சத்தை பெற்றுக் கொள்ளலாம். வேதாகமம் நம்முடைய கால்களுக்கு தீபமாயும் நம் பாதைக்கு வெளிச்சமாயும் இருக்கும், ஏனென்றால் நாம் விசுவாசிப்பதின் மூலம் இரட்சிப்பின் வழி நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. வேதாகமப்புத்தகம் தெள்ளத்தெளிவாக இதைக்குறித்து சொல்கிறது. எல்லா வேதவார்த்தைகளும் இதைக் குறித்து ஒரே குரலாய் சாட்சியாடுகிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்போழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். அப் 16:.31

ஒரு லூத்தரன் என்றால் என்ன?

கிருபையினால் மட்டும் (2) விசுவாசத்தினால் மட்டும் (3) கிறிஸ்துவினால் மட்டும் (4) வார்த்தையினால் மட்டும் இரட்சிக்கப்பட்டோம் என்று விசுவாசிக்கிற ஒரு கிறிஸ்தவனாய் ஒரு லூத்தரன் இருக்கிறான். கடவுள் ஒருவர் மாத்திரமே எல்லா துதிக்கும், போற்றுதலுக்கும், மகிமைக்கும், பாத்திரராயிருக்கிறார் !.

ஆமென்.